2. தகவல் கோரல்.

(ஆ) துணை வினாவிற்கு விடையாக அவை முன் வைக்கப்பெற்ற அறிக்கை மீது வினா எழுப்புதல்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் ஆணைக்கிணங்க, தொழிலாளர் நலத்துறை அமைச்சர், நான் 17-3-1982-ஆம் தேதி கேட்ட கேள்விக்கு இன்று அறிக்கை தந்திருக்கிறார். அதன்மேலும் கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் அந்த மாதிரி அறிக்கையை சீக்கிரம் வைக்கச் சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தொழிலாளர் நல அமைச்சர் அவருடைய கேள்வியை ஒட்டி அறிக்கை வைத்திருக்கிறார். அதன்மேல் கேள்வி கேட்க முடியுமா என்பது கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதன்மேல் கேட்க முடியாது. அதைப் படித்து, ஆராய்ச்சி செய்து, கேள்வி எழுதி அனுப்பி, ஒத்துக்கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகுதான் கேள்விகள் வரும்.

(இ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஓய்விலே இருக்கிறார், கடந்த 15ஆம் தேதியிலே யிருந்து. டி.எல்.ஓ. இல்லை, டி எம்.ஓ. இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டெக்னிக்காலிட்டீஸ் எல்லாம் இங்கே கேட்டு ஒன்றும் நடக்காது. (குறுக்கீடு) ஒரு ஆபீசர் போனால் அதையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருப்பதா? அதற்கெல்லாம் பதில் எதிர்பார்க்காதீர்கள், நல்லதல்ல.

TRUTH ALONE TRIUMPHS

3. அறிவிப்பு.

(அ) ஒலிபெருக்கிகளைச் சரியான முறையில் பயன்படுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது வசதிக்கென, இந்த அவையில் இயங்கி வந்த 111 பழைய ஒலிபெருக்கிகளுக்குப் பதிலாக, 155 கொக்குதலை ஒலிபெருக்கிகள் ரூபாய் ஒரு இலட்சத்து ஒன்பதாயிரம் செலவில் பொருத்தப் பெற்றுள்ளன. ஆயினும் உறுப்பினர்கள் ஒலிபெருக்கியினை ஆதாரமாக வைத்து எழுந்திருப்பதாலும் அவைகளை திருகி வளைத்துக் கொண்டிருப்பதாலும் அவைகள் அடிக்கடி பழுதுபடு கின்றன. இதனால் இதுவரை நான்கு ஒலிபெருக்கிகள் பழுதாகி விட்டன மேலும் அவற்றில் ஒரு ஒலிபெருக்கி பழுதுபட்டால்கூட

மொத்த அமைப்புமே இயங்காத நிலை ஏற்படக் கூடும். அவைகள் மிகவும் மெல்லிய கருவிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளதால் சரியான முறையில் அவைகளை நாம் வைத்திருத்தல் இன்றியமையாதது. மேலும் ஒரே மாதிரியான மைக்குகள் கிடைப்பதும் கிடையாது.

எனவே உறுப்பினர்கள் தயவுசெய்து ஒலிபெருக்கியினை ஆதாரமாகக் கொண்டு எழுந்திருப்பதையும், அவைகளை உபயோகிக்காத நேரங்களில் திருகிக் கொண்டிருப்பதையும் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) 4 ஒலிபெருக்கிகள் உடைந்தாயிற்று. நான் யாரையுமே தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லவில்லை. இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். இன்றைக்குத்தான் முதல்வர் பேசுகிறார், ஆகவே எல்லோரும் இருப்பார்கள். ஆகவே, சொல்லிவிட வேண்டுமென்று சொன்னேன். தனிப்பட்ட முறையிலே யாரையும் சொல்லவில்லை. இது பொது அறிவிப்புதான். நீங்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

2 தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஈ) உறுப்பினர்கள் விடுதியிலுள்ள தொலைபேசி சரிவர இயங்காமை.

திரு. ரா. உமாநாத்: டெலிபோன் விஷயமாக ரெய்ஸ் பண்ணியபொழுது இந்த பொது அறிவிப்பு வந்திருக்கிறது. நாம் எப்படி நடக்க வேண்டுமென்பதுமட்டும்தான் நான் என்ன சொல்கிறேன் என்றால், We are spending lakhs of rupees on telephones, but we have no control over the Telephone Department.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டெலிபோன் இல்லை, ஒலிபெருக்கி. நான் சொல்வது லவுட்ஸ்பீக்கர். நீங்கள் சொல்வதோ வேறு சப்ஜக்ட். டெலிபோன விஷயமாக நேற்றே சொல்லிவிட்டார்கள். ஸ்டீபனிடமே சொல்லலாம் என்று சொன்னார்கள்.

THIRU R. UMANATH: We are paying so many lakhs of rupees to the Telephone Department. They are not doing free service. பே பண்ணுகிறபொழுது, அதற்குத் தகுந்தாற்போல குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்க வேண்டாமா அவர்கள். அங்கே நாம் டெலிபோன் யூஸ் பண்ணாமல், வெளி டெலிபோனை யூஸ் பண்ணுகிறோம் என்று சொன்னால், அது வேறு. அங்கே, ஹாஸ்டலிலே, 'டெட்' ஆகவே இருக்கிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், டிபார்ட்மென்ட்டை 'ஹால்' செய்யுங்கள்.